# தமிழகம்

## தமிழ் மொழி இலக்கிய வளர்ச்சி விருது

- தமிழ் மொழி இலக்கிய வளர்ச்சிக்கான தமிழக அரசு விருது அறிவிக்கப்பட்டுள்ளது. பொங்கல் முன்னிட்டு அறிவிக்கப்பட்ட விருதுகள் விவரம் வருமாறு:
- திருவள்ளுவர் விருது - புலவர் பாவீரமணி
- பெரியார் விருது - பண்ருட்டி ராமச்சந்திரன்
- காமராஜர் விருது - நீலகண்டன்
- அண்ணா விருது - கவிஞர் கூரம் துரை
- மகாகவி பாரதியார் விருது - கணபதிராமன்
- திரு.வி.க., விருது - இலக்குவனார்
- பாரதிதாசன் விருது - கோபாரதி
- கி.ஆ.பெ.விஸ்வநாதன் விருது - மீனாட்சி முருகரத்தினம்
- அம்பேத்கர் விருது - டாக்டர் துரைசாமி விருது பெறுவோருக்கு தலா ஒரு லட்சம் ரொக்கமும், ஒரு சவரன் தங்க பதக்கமும், தகுதிச்சான்றும் வழங்கப்படும். (ஜன. 13)

## 'உதய்' திட்டத்தில் தமிழகம்

- 'உதய்' திட்டத்தில் 21-வது மாநிலமாக தமிழகம் இணைந்துள்ளது. இதன் மூலம் மாநிலத்துக்கு ரூ.11 ஆயிரம் கோடி மதிப்பிலான ஒட்டுமொத்த பலன்கள் கிடைக்கும் என்று மத்திய மின் துறை இணையமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.
- "உதய்' திட்டத்தை மத்திய அரசு 2015, நவம்பர் 20-இல் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தில் தமிழகம் சேர்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தில்லியில் மத்திய மின் துறை இணையமைச்சர் பியூஷ் கோயல் தலைமையில், தமிழக மின் துறை அமைச்சர் பி.தங்கமணி முன்னிலையில் கையெழுத்தானது.
- மின் பற்றாக்குறை பிரச்னையை சமாளிக்க மின் கட்டணத்தை மாற்றியமைப்பது மட்டும் தீர்வாகாது. மின் சேமிப்பை ஊக்குவிக்கும் எல்இடி பல்புகள், குளிர்சாதன பெட்டிகள், மின் விசிறிகள் போன்றவற்றை பயன்படுத்த மின் நுகர்வோரை மாநிலங்கள் ஊக்குவிக்கலாம்.

## சோழர் கால கல்வெட்டுகள்

- திருச்சி மாவட்டம், பேட்டைவாய்த்தலை அருகே சோழர் கால கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இது முழுமையான நிலையில் உள்ள முதல் கல்வெட்டு தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த முதலாம் ஆதித்த சோழனின் கல்வெட்டு ஆகும்.
- தற்போது கிடைத்துள்ள புதிய கல்வெட்டு ஆதித்த சோழனின் 35-வது ஆட்சியாண்டு (கி.பி. 905) கல்வெட்டாகும். (ஜனவரி 9)

## சிறுவர் 'டிராபிக் பூங்கா'

- தமிழகத்தின், முதல் நவீன சிறுவர்,

### பாண்டியர்கள் காலத்து கல்தொட்டி



- மேட்டூர் அணை காவிரிக்கரையில் சுமார் 6 அடி நீளமும், இரண்டு அடி அகலமும் கொண்ட ஒரே கல்லால் செதுக்கப்பட்ட தண்ணீர் தேக்கி வைக்கும் பழங்கால கல்தொட்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இதில் மீன் சின்னமும், வட்ட வடிவமும் செதுக்கப்பட்டுள்ளது. மீன் சின்னம் பாண்டிய மன்னர்களுடையது என்பதால், அது பாண்டியர்கள் காலத்து தொட்டியாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.
- கிராமங்களில் கால்நடைகளை சந்தைக்கு கொண்டு செல்லும் வழியில் கால்நடைகள் தண்ணீர் பருக, இதுபோன்ற தொட்டிகளை வைப்பது வழக்கம். மேலும், பழங்காலங்களில் கோயில்களுக்கு எதிரே இதுபோன்ற கல்லால் செதுக்கப்பட்ட தொட்டிகள் வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. (ஜனவரி 4)

## கோவையை சேர்ந்தவருக்கு ஆஸ்கார்



- அமெரிக்காவில் வசித்து வரும் கோவையை சேர்ந்த கிரண் பட் என்பவர் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவில் ஆஸ்கார் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- திரையுலகின் உயரிய விருதாக கருதப்படும் ஆஸ்கார் விருது வழங்கும் விழா பிப்ரவரி மாதம் நடக்க உள்ளது. இதில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவில் விருதுகளை தி அகாடமி ஆப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் அண்ட் சைன்ஸ் அறிவித்துள்ளது. இதில் 18 பேருக்கு விருது வழங்கப்படவுள்ளது.
- இந்த விருதுக்கு கோவை சாய்பாபா காலனியை சேர்ந்த கிரண் பட் என்ற இந்தியர் ஒருவரும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். (ஜனவரி 11)

'டிராபிக்' பூங்கா, கோவையில் திறக்கப் பட்டது.

- ஒரு ஏக்கரில் அமைந்துள்ள பார்க்கில், சாலையில் இருப்பது போன்று, போக்குவரத்து சிக்னல்கள், வளைவுகள், பஸ் ஸ்டாப்கள் அமைக்கப்பட்டு உள்ளன.
- வாகனங்களை பாதுகாப்பாக இயக்குவது; வாகன பராமரிப்பு; விபத்து தவிர்ப்பு; போக்குவரத்து விதிகள் உள்ளிட்டவற்றை, மாணவர் பருவத்திலேயே தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில், சிறுவர், 'டிராபிக் பார்க்' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. (ஜனவரி 11)

### புதிதாக கொற்கை பாண்டியர் நாணயம் கண்டுபிடிப்பு

- மன்னர் தலையும், செழியன் பெயரும் கொண்ட மேலும் ஒரு கொற்கை பாண்டியர் நாணயம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- ஏற்கனவே சங்ககால கொற்கை பாண்டியர் வெளியிட்ட செழியன் நாணயங்களை வைத்து ஆய்வு செய்தபோது தாம்பரபருணி நாடு தென் தமிழகத்தில் தான் இருந்தது எனவும், அதன் தலைநகர், கொற்கை எனவும் அறியப்பட்டுள்ளது.
- இப்போதும் மேலும், மேலும் சான்றுகள் கிடைத்துக் கொண்டிருப்பது, தமிழக தொன்மை வரலாற்றைப் பற்றிய ஆய்வுக்கு அதிகளவு உதவும் என்பது குறிப்பிடத் தக்கது. (ஜன. 13)

### சென்னை-பெங்களூரு அதிவிரைவு ரயில்

- அமெரிக்காவைச் சேர்ந்த ஹைப்பர்லூப் என்ற நிறுவனம் அதிவிரைவு ரயில் திட்டத்தை இந்தியாவில் கொண்டு வர திட்டமிட்டுள்ளது.
- இரு நகரங்களுக்கும் இடையே மேம்பாலம் அமைத்து, அதில் பெரிய குழாய் போன்ற அமைப்பிற்குள் தண்டவாளம் அமையும். இதில் மணிக்கு 1200 கி.மீ., தூரம் பயணிக்கும் அதிவிரைவு ரயில் இயக்கப் படும்.
- முதல் கட்டமாக இந்த திட்டத்தை சென்னை - பெங்களூரு இடையே நிறை வேற்ற இந்நிறுவனம் முடிவு செய்துள்ளது.
- இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் வெறும் 30 நிமிடங்களில் சென்னை யிருந்து பெங்களூருவிற்கு செல்லலாம். (ஜனவரி 16)

### ஆன்லைனில் அரசு சேவை

- தமிழகம் 54 வகையான அரசு சேவைகளை ஆன்லைன் மூலமாக அளித்து 5-வது இடத்தை தக்க வைத்துள்ளது.
- மொத்தம் 42 துறைகளைச் சேர்ந்த 372 அரசு சேவைகள் தற்போது ஆன்லைன் மூலமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.
- இதில் இமாச்சல பிரதேசம் மொத்தம் 53 வகையான அரசு சேவைகளை ஆன்லைன் மூலமாக வழங்கி ஆன்லைன் சேவையில் இந்தியாவிலேயே முதலிடத்தைப் பிடித்துள்ளது. (ஜனவரி 17)

### அதிநவீன அக்னி-5 ஏவுகணை

- அணு ஆயுதங்களை சுமந்தபடி கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிநவீன அக்னி-5 ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
- ஒடிசாவின் அப்துல்கலாம் தீவில் உள்ள ஒருங்கிணைக்கப்பட்ட சோதனை மையத்தின் நகரும் ஏவுதளத்தில் இருந்தபடி சோதித்து பார்க்கப்பட்டது.
- இந்தியாவின் கிழக்கே சீனா வரை சுமார் 5,000 கிமீ தூரத்தில் உள்ள எதிரிகளின் இலக்கை துல்லியமாக தாக்கும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. (டிசம்பர் 26)

### டிஆர்டிஓ சோதனை

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட வான்வழி போர்க்கள எதிர்ப்பு ஆயுதத்தை இந்திய விமானப்படை விமானத்தில் பொருத்தி ராணுவ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கழகம் (டிஆர்டிஓ) வெற்றிகரமாக சோதனை நடத்தியது.
- விமான ஓடுபாதைகள், பதுங்கு குழிகள், விமானத்தின் பக்கவாட்டில் பொருத்தப்பட்டிருக்கும் ஆயுதங்கள் உள்ளிட்ட தளவாடங்களை அழிக்கும் திறன் கொண்ட ஸ்மார்ட் வான்வழி போர்கள எதிர்ப்பு ஆயுதம் சோதித்து பார்க்கப்பட்டது.
- 120 கிலோ எடை கொண்ட இந்த ஆயுதம் இந்திய விமானப்படையின் விமானத்தில் பொருத்தி ஒடிசாவின் சந்திப்பூர் சோதனை மையத்தில் பரிசோதிக்கப்பட்டது. (டிசம்பர் 25)

### 100-வது இலவச வை-பை

- பயணிகளுக்கு பல்வேறு வசதிகள் அளிக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக, இந்த ஆண்டுக்குள், 100 ரயில் நிலையங்களில், இலவச, 'இன்டர்நெட்' வசதி அளிக்கும் வகையில், 'வை - பை' வசதி செய்யப்படும்.
- அதன்படி, மும்பை ரயில் நிலையத்தில் இந்த திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.
- கேரள மாநிலம் கொல்லம் ரயில் நிலையத்தில், இந்த வசதி ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம், 'வை - பை' வசதி அளிக்கும் திட்டம், 100 ரயில் நிலையங்களில் செய்யப்பட்டு உள்ளது. (டிசம்பர் 28)

### இந்திய திறன் கழகம்

- உத்திரப்பிரதேச மாநிலத்தின் கான்பூர் நகரில் நாட்டின் முதல் இந்திய திறன் கழகம் அமைக்கப்பட உள்ளது.
- இந்த அமைப்பானது மத்திய திறன் மேம்பாட்டு அமைச்சரகம் மற்றும் சிங்கப்பூர் தேசிய தொழில்நுட்ப கழகத்துடன் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது.
- இதே போல் இந்தியா முழுவதும் மேலும் ஆறு கழகங்களை உருவாக்க மத்திய

### இரண்டாவது ஸ்கார்பியன் நீர்மூழ்கி கப்பல்



- ஸ்கார்பியன் வகை 2-வது நீர்மூழ்கிக் கப்பலுக்கு காந்தேரி எனப் பெயரிடப்பட்டுள்ளது. பிரான்ஸ்-இந்தியா இணைந்து 6 நீர்மூழ்கிக் கப்பல் தயாரிக்க 2005-ஆம் ஆண்டு ஒப்பந்தம் போடப்பட்டது. இந்த நீர்மூழ்கிக் கப்பல் மும்பையில் உள்ள எம்டிஎல். கப்பல் கட்டும் தளத்தில் தயாரிக்கப்படுகிறது. அதற்கு காந்தேரி எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- மேம்பட்ட தகவல் தொழில்நுட்பங்கள் மற்றும் எதிரிக் கப்பல்களை குறி வைத்து தாக்கும் திறன் கொண்ட இந்த ஸ்கார்பியன் வகை நீர்மூழ்கிகள், கடலில் வைத்து சில காலம் பயிற்சி மற்றும் பரிசோதனைகள் கடற்படையால் நடத்தப்படும்.
- அனைத்து சோதனைகளும் நிறைவு பெற்ற பின்பு நாட்டிற்காக கடற்படையிடம் அர்ப்பணிக்கப்படும் என கடற்படை தளபதி தெரிவித்துள்ளார்.

## இந்தியாவின் முதல் அதிவிரைவு புல்லட் ரயில்



- குஜராத் மாநிலம் ஆமதாபாத், மும்பை இடையே அதிவிரைவு புல்லட் ரயில் திட்டத்திற்கான ரூபாய் 77,000 கோடி ஆகும். இது தொடர்பான ஒப்பந்தம் அம்மாநிலத்திற்கும் ரயில்வே அமைச்சகத்திற்கும் இடையே காந்திநகரில் நடந்த மாநாட்டில் கையெழுத்தானது.
- 1.1 லட்சம் கோடி செலவு பிடிக்கும் இத்திட்டத்திற்கு 70 சதவீத பணமான 77,000 கோடியை மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்க உள்ளது.
- குஜராத் மாநிலம் ஆமதாபாத்திற்கும் மும்பைக்கும் இடையே மணிக்கு 350 கி.மீ., வேகத்தில் இந்த அதிவிரைவு புல்லட் ரயில் ஓட இருக்கிறது. இரு நகரங்களுக்கும் இடையேயான 508 கி.மீ., தூரத்தை இரண்டு மணி நேரத்தில் கடந்து விடும்.
- ஆகமதாபாத் - மும்பை இடையே அமைய உள்ள இந்த ரயில் தடம் 21 கி.மீ., நீளத்திற்கு நாட்டிலேயே முதன் முதலாக கடலுக்கு அடியில் அமைக்கப்பட உள்ளது. (ஜனவரி 12)

அரசு திட்டமிட்டுள்ளது. (டிசம்பர் 22)

### ஐ.ஆர்.சி.டி.சி.,யின் புதிய ஆப்

- ஆன்-லைன் முன்பதிவு ரயில்வே அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஐஆர்சிடிசி., எனப்படும் இந்திய ரயில்வே கேட்டரிங் மற்றும் சுற்றுலா கழகத்தின் இணையதளம் மூலம் ஆன்-லைன் டிக்கெட் முன்பதிவு நடைபெறுகிறது.
- ஐஆர்.சி.டி.சி., ரயில் கனெக்ட் 3 என்ற பெயரில் புதிய ஆப் வடிவமைக்கப்பட்டது. மொபைல் போனில் ஐஆர்சிடிசி., ஆப் டவுன்லோட் செய்து டிக்கெட் முன்பதிவு செய்ய முடியும். இதில் வேகமாகவும் எளிமையாகவும் டிக்கெட் முன்பதிவு செய்யும் வகையில் மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. புதிய ஆப்பை ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபு அறிமுகம் செய்தார்.
- இந்த ஆப் பயன்படுத்தி தட்கல் டிக்கெட், பெண்கள் கோட்டா, பிரீமியம் தட்கல் கோட்டா மற்றும் சாதாரண டிக்கெட் முன்பதிவு உள்ளிட்ட பல சேவைகளை பெறலாம். (ஜனவரி 7)

### ஆதார் கட்டாயம்

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் (100 நாள் வேலை) பணியாற்றுவதற்கு ஏப்ரல் 1 முதல் ஆதார் அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் பணியாற்றி வரும் மக்கள் தங்களிடம் ஏற்கெனவே உள்ள ஆதார் அடையாள அட்டைகளைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் ஆதார் அட்டை இல்லாதவர்கள் வரும் மார்ச் 31-ம் தேதிக்குள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. (ஜனவரி 7)

### புதிய தளபதிகள்

- இந்தியாவின் புதிய ராணுவத்தளபதியாக ஜெனரல் பிபின் ராவத்தும், விமானப் படை தளபதியாக ஏர் சீப் மார்ஷல் பிரேந்தர் சிங் தனோவாவும் பொறுப் பேற்றுக் கொண்டனர்.
- இந்திய ராணுவத்தளபதியாக இருந்த ஜெனரல் தல்பிர் சிங் மற்றும் விமானப் படை தளபதியாக இருந்த ஏர் சீப் அரூப் ராஹா ஆகிய இருவரும் ஓய்வு பெற்றனர்.
- அதனைத் தொடர்ந்து டெல்லியில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் புதிய தளபதிகள் இருவரும் பொறுப்பேற்றுக் கொண்டனர். (டிசம்பர் 31)

### இரண்டு புதிய செயலிகள்

- ஸ்மார்ட் கன்ஸ்யூமர் மற்றும் ஆன்லைன் கன்ஸ்யூமர் மீடியேஷன் சென்டர் என்ற இரண்டு புதிய செயலிகளை நுகர்வோர் குறைகளை ஆன்லைன் மூலமாக விரைந்து தீர்ப்பதற்கு மத்திய அரசு அறிமுகப் படுத்தியுள்ளது. (டிச. 27)